# எழுத்தின் நினைவுகளில்...!



எழுத்து என்பது அடையாளம்!
திராவிட மாடலின் அடையாளம்!
எழுத்துடைய
தொன்மையான மொழி தமிழ்!
எண்ணும் எழுத்தும்
தமிழர்களுக்குக் கண்கள்!

எழுதாக் கிளவி ஆரியம்!
வடமொழிக்கும் கிரந்த எழுத்தைத்
தந்தது தமிழ்நாடுதான்.
தலை எழுத்தை வாழ்க்கையோடு
முடிச்சு போடுகிறவர்களும் உண்டு.
எழுத்தே நினைவுதான்!
நினைவுகளின் சேகரிப்புதான்!

எழுத்து என்பது ஒலியின் சப்தத்தின் நினைவு.
சொல்லின் நினைவு கூட!
சிந்தனையின் நினைவுப் பதிவு கூட!
எழுத்து
சிந்தனைகளின் நினைவுச் சுரங்கம்!
வரும் தலைமுறைகளுக்கும்
வாழும் முறையைச் சுட்டிக் காட்டும்
சங்கிலித் தொடர்!

ஆனாலும்
எழுத்தின் நினைவில் என்ன இருக்கும்?
எழுத்தைத் தந்த எழுதுகோல் இருக்கலாம்!
அப்படியானால்
எழுத்தின் தாய் எழுதுகோலாக இருக்கிறது!
எழுத்திற்கான சிந்தனையை
எழுத்தின் தந்தை என்று கூறலாம்.
ஆம்!
எழுத்துக்குத் தாய் எழுதுகோல்
தந்தை சிந்தனை!
எழுத்துக்குத் தாயும் தந்தையுமாக
முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

தமிழ் மொழியின் தலை எழுத்து
அகரம்.
**"அகர முதல் னகர இறுவாய்"** என்பது
தொல்காப்பியம்.
**"அகர முதல எழுத்தெல்லாம்"** என்றார்
திருவள்ளுவர்
அகரத்தில்
அ, இருக்கிறது; க, இருக்கிறது.
அ எழுத்தின் பின் க இருக்கிறது.
அ எழுத்தைச் சொல்ல
அகரம் என்பதில் க வருகிறது.

**தமிழின் டி.என். ஏ. அகரமாக இருக்கிறது.**
**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத்**
**தலை எழுத்தும் அகரம் தான்.**
**அ, என்றால் அண்ணா!**
**க, என்றால் முத்தமிழ் அறிஞர் கலைஞர்!**
**அண்ணாவுக்குப் பின் கலைஞர்!**
**அகரத்தில் க சேர்ந்தே வருகிறது!**
**க இல்லாமல் அ, தனியே கூறப்படுவதில்லை**
**அப்படியே**
**க, சொல்லும் போதும் க்+அ**
**அ கூடவே இருக்கும்!**
**அருகிலே இருக்கும்**
**நினைவுகளில் மட்டும் இல்லை**
**நினைவிடங்களிலும் கூட!**

**அ, உயிர் எழுத்து என்றால்**
**க, உயிர் மெய்.**
**அண்ணா என்ற உயிருடன் சேர்ந்த மெய்யாகக் கலைஞர்!**
**உயிர் எழுத்து 12ம் மெய்யெழுத்து 18ம்**
**தமிழில் முதல் எழுத்துகள்!**
**அண்ணாவும் கலைஞரும்**
**தமிழுக்கும் முதல் எழுத்துகள்!**

எழுத்தின் தாய்
எழுதுகோல் என்பதைப் போலச்
சொற்களின் பிறப்பிடம்
சொல்லின் தாய், நாக்கு.
அதியமானை நினைத்து
ஔவையார் பாடிய பாடலில்
அதியமான் இல்லாததால்
அவர் இழந்து நிற்பதாக
ஒரு பட்டியல் இருக்கும்.

அதில்
**"அம்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்**
**சென்று வீழ்ந்தன்று அவன்**
**அருநிறத்து இயங்கிய வேலே"**என்று வரும்
அதியமான் மார்பில் பாய்ந்த வேல்
சொல்லின் தாயாகிய புலவர் நாவில்
போய் வீழ்ந்ததாம்.

பாரதியாரை நினைத்து
**"சிந்துக்குத் தந்தை**
**செந்தமிழ்த் தேனீ**
**புதிய அறம் பாட வந்த அறிஞர்**
**மறம் பாட வந்த மறவன்"** என்றெல்லாம்
பாவேந்தர் பாடிய வரிகளில்
செம்மொழியைப் பெற்றுத் தந்த
முத்தமிழ் அறிஞரும்
நினைவுக்கு வருகிறார்!

இலக்கணத்தில் மட்டுமே
அதிகாரங்களாக இருந்தன
தமிழ் எழுத்தும் சொல்லும் !

ஆட்சிக்கு வரும் முன்பே
அவர் எழுத்துக்கும் சொல்லுக்கும்
அதிகாரம் சேர்த்தவர்!
எழுத்தாலும் சொல்லாலும்
அதிகாரத்தை மாற்றியவர்!
தமிழுக்கு
அதிகாரம் பெற்றுத் தந்தவர்!

**"எழுத்தெனப் படுப**
**அகர முதல் னகர இறுவாய்**
**முப்பஃ தென்ப"** எனும்
தொல்காப்பியத்தின் முதல் நூற்பாவிலேயே
ஆய்தம் போன்ற
விளிம்புநிலை சார்பு எழுத்துக்கும்
கொடுக்கப்பட்டிருக்கும் இட ஒதுக்கீட்டை
எடுத்துச் சொன்னவர்!

தென்பாண்டிச் சிங்கத்திற்குத்
தமிழ்ப் பல்கலைக்கழக இராசராசன்
விருதை வழங்கிய
அந்நாள் குடியரசுத் தலைவர்
மேதகு சங்கர் தயாள் சர்மா
கலைஞருக்கு
முத்தமிழ் அறிஞர் என்ற
பாராட்டையும் வழங்கினார்
கூடவே
எழுதுகோல் பேனா ஒன்றையும்
பரிசளித்தார்!

இப்போது
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
இதழியல் துறையினருக்கு
வழங்கி வருகிறார்.
கலைஞர் எழுதுகோல் விருதினை!

முத்தமிழ் அறிஞருக்கு
அவர் எழுத்தும் சொல்லுமே நினைவுகள்தாம்!
அவர் சாதனைகளே நினைவுகள் தாம்!
அவரைப்பற்றி நினைக்கிற போதும்
எழுத்துகளே முன் வந்து நிற்கின்றன.
தேவைப்படுகின்றன!
ஏனெனில் எழுத்துகளை
உரு எழுத்து, கரு எழுத்து,
ஒலி எழுத்து, உணர்வு எழுத்து என்று
யாப்பிலக்கணம் வகைப்படுத்தும்.
முத்தமிழ் அறிஞரின் எழுத்துகளையும்
அப்படியே வகைப்படுத்தலாம் போல.

ஆகவே
**அவரைச் சுமக்கும்**
**நினைவுகளின் அடையாளமாக**
**தலைமுறைகளை அடைகாக்கும்**
**நினைவுகளின் சேகரிப்பாக**
**வங்கக் கடலோரம்**
**அறிஞர் அண்ணாவின் அருகில்**
**முத்தமிழ் அறிஞரை**
**நினைவில் நிறுத்தி இருக்கிறார்**
**தமிழ்நாடு முதல்வர்!**



**முனைவர்**
**ம.இராசேந்திரன்**

# அண்ணா என்றென்றும் ஆளவே விழித்திருப்பார்!





வீழ்ந்திருந்த தமிழரிடம்
விடுதலை உணர்வூட்டித்
தாழ்ந்திருந்த தமிழ்நாட்டைத்
தலைநிமிரச் செய்தபின்
வாழ்ந்திருக்க விரும்பாமல்
வங்கத்துக் கடலோரம்
ஆழ்ந்திருக்கப் போனீரோ?
அறிதுயில் கொண்டீரோ?

காய்ந்திருக்கும் பாறையல்ல,
கனிவுள்ளம் கொண்டநீர்
சாய்ந்திருக்க இடம்தேடித்
தரைக்குள்ளே சென்றீரே!
சூழ்ந்திருக்கும் கோடிப்பேர்
தொலையாத துயரத்தில்
தோய்ந்திருக்க விட்டீரே;
துன்பத்தை நட்டீரே!

மாய்ந்துவிட்டீர் என்றெண்ணி
மாளாத அவலத்தில்
ஓய்ந்திருக்க மாட்டாமல்
ஓலமிட்டே அலைகளும்
மாய்ந்தழுதல் கேளீரோ!
மனமிரங்கிக் காணீரோ!
தேய்ந்துகோடி நுரைகளாய்த்
தேம்புதல் நோக்கீரோ?

வேய்ந்திருக்கக் கூரையின்றி
வெயிலில்நீர் உறங்குவதோ?
ஆய்ந்திருக்கக் கண்டாலோ,
அண்ணா உண்மைஒன்று
பாய்ந்திருக்கும் மனத்திலே!
படுத்தாலும் இருளோட்டிக்
காய்ந்திருக்கும் சூரியனே
காலமெலாம் வேண்டுமென்று
தேய்ந்திருக்கும் தமிழருக்குத்
தேயாமல் செப்புவிரோ?

பலவாண்டு வாழ்ந்துநீர்
பைந்தமிழ் நாட்டினை
உலகெலாம் மெச்சிட
உயர்த்துவீர் என்றிருக்கச்
சிலவாண்டே ஆட்சித்தேர்
செலுத்திய போதிலும்
நிலவாண்ட வானம்போல்
நெடுவரை இமயம்போல்

**கலமோட்டிக் கீழ்த்திசைக்**
**கடலாண்ட சோழன்போல்**
**அலையாண்ட கடலினை**
**அடல்கொண்ட பாண்டியன்போல்**
**மலையாண்ட இமயத்தின்**
**மடிவென்ற சேரன்போல்**
**சிலையாண்ட பல்லவன்போல்**
**செங்கைகள் பாரிபோல்**

**குலையாண்ட வாழைபோல்**
**குறளாண்ட வள்ளுவன்போல்**
**நிலமாண்டு தமிழரின்**
**நெஞ்சாண்டு நின்றிங்கே**
**இலகினும் அண்ணா நீர்**
**இவ்வையம் விட்டதுதான்**
**விலகாத துயரமாம்;**
**விடியாத அவலமாம்!**

ஆனாலும் நீர்எங்கள்
அகங்களில் நீங்காமல்
தேனான குரலெழுப்பித்
தெவிட்டாமல் இனித்திடுவீர்;
கூனான பேர்களும்
கும்பிட்டுக் கிடப்போரும்
ஆனானப் பட்டவரை
ஆணவம் கொண்டவரை
ஏனெனக் கேட்டிடும்
எழுச்சியாய் இருந்திடுவீர்;
கோனெனத் தமிழருள்ளம்
குடிகொண்டே இயங்கிடுவீர்!

அரசியலில் தெளிவாக
அரிடாட்டில் மிஞ்சியநீர்
உரலாகத் தமிழ்நாடு
இடிபடும் உண்மையை,
கரவாக வடநாடு
காலூன்றும் கயமையை
நிரலாகத் தமிழரின்
நெஞ்சங்கள் ஏற்றினீர்!
முரசாக ஒலித்தநீர்
முத்தமிழ் போற்றினீர்!

உரமாகக் கழகத்தை
உருவாக்கிக் காட்டினீர்!

**இந்தியக் கண்டத்தில்**
**இருக்குமட்டும் தமிழ்நாடு**
**முந்தியே செல்வதற்கு**
**முயன்றாலும் தில்லிதான்**
**நந்தியாய் நின்றுவிடும்**
**நற்செயல் தடுத்துவரும்**
**விந்தியம் தாண்டினால்**
**விழிகளை மூடிவிடும்!**

பிந்திய காலத்துப்
பிறந்தவொரு மொழியான
இந்தியைத் தூக்கியே
இமயத்தில் வைப்பதற்குத்
தந்திரம் பலசெய்யும்;
சான்றுகள் பலகூறும்!
எந்திரம் போலவே
இட்டபடி இயங்கிடும்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

அந்தநாள் முதலாக
அரும்பெரும் இலக்கியங்கள்
சொந்தமாய்க் கொண்டமொழி
தொல்லுலகம் கண்டமொழி
இந்தநாள் வரையிலும்
இலக்கணம் நின்றமொழி
செந்தமிழுக்கு எதிராகச்
செய்கின்ற சூழ்ச்சிகள்
செந்தழலில் வேவதற்குத்
தீப்பொறி கிளப்பினீர்!

வந்தமொழி எதுவெனினும்
வண்டமிழ்க்கு எதிரானால்
வந்தவழி ஓடுதற்கு
வால்சுருட்டிக் கொள்வதற்குச்
சிந்தித்த கருத்துகள்
தீட்டிய போர்ச்செயல்கள்
இந்தநாள் மட்டுமல்ல
எதிர்வரும் காலத்தும்
சந்தனமாய்க் கமழ்ந்திருக்கும்;
தமிழர்க்குக் காப்பளிக்கும்!

தில்லியின் ஆட்டந்தான்
தீராது ஒருநாளும்!
வல்லடிகள் செய்திருக்கும்;
வாய்மையைக் கொன்றுவிடும்;
நல்லதாக நடித்தென்றும்
நாட்டாமை புரிந்திருக்கும்;
வல்லரசாய்த் தனைநினைத்து
மாநில உரிமைகளைப்
புல்லாக நசுக்குதற்கும்
பூண்டாக எரிப்பதற்கும்
சொல்லாத பொய்யில்லை;
தொடுக்காத கணையில்லை!
வெல்லமுடி யாதெனினும்
வீம்புக்கும் குறைவில்லை!

மல்லுக்கு நிற்கின்ற
மையத்தின் அரசினை
நில்லென்று தடுக்கின்ற
நெஞ்சுரம் கழகத்தின்
வல்லமையென அண்ணாநீர்
வரித்ததின்றும் உண்மையே!

**எல்லாமே தனக்கென**
**எண்ணிடும் ஒன்றியத்தின்**
**பொல்லாங்கை முற்றிலும்**
**போக்குதற்குத் தளபதி**
**வல்லாங்கு உம்வழியில்**
**வழுவாமல் அயராமல்**
**செல்கின்றார்; கழகத்தின்**
**திருக்குறள் நீர் என்று!**

தனிநாடு மட்டுமே
தமிழர்க்குத் தீர்வாகும்
எனஅன்று நீர்உணர்ந்து
இயக்கத்தை உருவாக்கிப்
புனலூற்றி வளர்க்கையில்
புதுநெருப்பை ஒன்றியம்
தினவெடுத்துச் சட்டத்தால்
தீய்த்துவிட, மனத்திலே
கனவான தனிநாடு
கைவிட்ட போதிலும்
நனவாகக் காரணங்கள்
நாளெலாம் வளருமென்றீர்!

மனந்தளர்ந்து போகாமல்
மாற்றாக மாநிலத்
தன்னாட்சி ஒன்றுதான்
சரியாகும்,சால்பாகும்
என்றாய்ந்து அண்ணா நீர்
இறுதிமுறி தெளிவாக
நன்றெழுதிச் சென்றீரே;
நடக்குமிங்கே என்றீரே!

ஒன்றியம் ஆயிரமாய்
ஊறுகள் செய்தாலும்
குன்றிடும்; மெல்லமெல்ல
குலைந்திடும், தமிழ்நாடு
வென்றிடும் நாள்வரும்
வேளையில் அண்ணா நீர்
இன்றிங்கே இல்லையென்ற
ஏக்கத்தின் கண்ணீர்தான்
சென்றுமது கல்லறைக்குத்
திருமுழுக்குச் செய்திடும்!

**கடலோர மணலிலே**
**காற்றாட அலையாட,**
**படகாட மீனாட,**
**பகலவன் வெயிலாட,**
**கடன்வாங்கி நிலவாட,**
**கலங்கரை விளக்காட,**
**கடமையே கண்ணான**
**கலைஞரும் உடனாக**
**இடங்கொண்ட அண்ணா நீர்**
**என்றுமே இருக்கின்றீர்!**

திடங்கொண்ட மனத்தோடு
திரள்கின்ற கண்ணீர்தான்
குடங்குடமாய் வளர்ந்தொரு
கொள்ளிடம் காவிரியாய்க்
கடலாகப் பெருகிடும்;
காலமெல்லாம் உருகிடும்!
மடலாக நீர்எழுதி
மாணவராய் எமைவளர்த்து
அடலேறாய் மட்டுமல்ல,
அறிவேறாய் ஆக்கிவிட்டீர் !

**உடலிங்கே மறைந்தாலும்**
**உயிர் உணர்வு எந்நாளும்**
**விடலெங்கே? அண்ணா உம்**
**விழியென்றும் உறங்காமல்**
**படர்ந்திருக்கும்; தமிழ்,இனம்**
**பார்த்திருக்கும்; காத்திருக்கும்!**
**தொடர்ந்திருக்கும்,செல்லுகின்ற**
**தொலைவெல்லாம் துணையிருக்கும்!**
**அடர்ந்திருக்கும் தமிழ்நாட்டை**
**அண்ணா,நீர் என்றென்றும்**
**ஆளவே விழித்திருக்கும்!**